2022-23-ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட (பக்கங்களின் எண்ணிக்கை : 2)
மாணவ-மாணவியருக்கு மட்டும்)

SUBJECT CODE 22 PTM 102

**REG.NO:**

**என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி) :: பொள்ளாச்சி**

**பருவ இறுதித் தேர்வுகள் : டிசம்பர் – 2022**

| | |
|---|---|
| **எம்.ஏ. தமிழ் இலக்கியம்** | **மதிப்பெண்கள் : 50** |
| **முதல் பருவம்** | **நேரம் : 3 மணி நேரம்** |

**தொல்காப்பியம் - எழுத்ததிகாரம்**

**பகுதி – அ (10 x 1 = 10 மதிப்பெண்கள்)**

**பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக** **(K1)**

1. ஈரளபு இசைக்கும் எழுத்து எது?
   அ) நெடில் ஆ) குறில் இ) ஒற்று ஈ) அளபெடை
2. இதழ் குவியத் தோன்றும் எழுத்துக்கள் எவை?
   அ) எ, ஏ ஆ) க, ங இ) அ, ஆ ஈ) உ, ஊ, ஒ, ஓ, ஔ
3. வேற்றுமை உருபுகள் நிற்கும் இடம் எது?
   அ) பெயரின் பின் ஆ) வினையின் பின் இ) இடையின் பின் ஈ) உரியின் பின்
4. யா என்னும் வினாப் பெயர் எந்தச் சாரியைப் பெற்று புணரும்?
   அ) இன் ஆ) வற்று இ) அன் ஈ) அத்து
5. பத்து என்னும் எண்ணுப்பெயர் முன் ஆயிரம் வந்தால் எவ்வாறு புணரும்?
   அ) பத்தாயிரம் ஆ) பத்து ஆயிரம் இ) பதினாயிரம் ஈ)பதின் ஆயிரம்

**பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு சொற்களில் விடை தருக.** **(K2)**

6. தொல்காப்பியம் யாருடைய அவையில் அரங்கேற்றப்பட்டதாகச் சிறப்புப்பாயிரம் குறிப்பிடுகிறது?
7. மெய்யின் இயக்கம் எதனோடு சிவணும்?
8. மூவகைத் திரிபுகள் யாவை?
9. ஓகார இறுதி எச் சாரியைப் பெறும்?
10. மரப்பெயர் கிளவிக்கு உரிய சாரியை எது?

**பகுதி – ஆ ( 5 x 3 = 15 மதிப்பெண்கள்)**

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க.** **(K3)**

11. அ) ‘மெய்யோடு இயையினும் உயிரியல் திரியா’ என்னும் நூற்பாவின் கருத்து யாது?
(அல்லது)
ஆ) ‘உட்பெறு புள்ளி உருவாகும்மே’ - இந்நூற்பா உணர்த்தும் செய்தி யாது?

(த.பி.பா)

*ETHICAL PAPER*

12. அ) மொழிக்கு முதலாகும் எழுத்துக்கள் யாவை?

(அல்லது)

ஆ) ‘அவ்வா றெழுத்தும் மூவகைப் பிறப்பின’ – விளக்கம் தருக.

13. அ) வேற்றுமைப் புணர்ச்சி, அல்வழிப் புணர்ச்சி என்பவற்றைச் சான்றுடன் எழுதுக.

(அல்லது)

ஆ) நெடுமுதல் குறுகும் மொழி – குறிப்பு வரைக.

14. அ) எல்லாரும், எல்லீரும் என்ற சொற்கள் புணரும் முறை குறித்து தொல்காப்பியர் உருபியலில் கூறுவன யாவை?

(அல்லது)

ஆ) சுட்டெழுத்தின் முன் நாற்கணமும் புணருமாற்றைச் சான்றுடன் எழுதுக.

15. அ) தேன் என்ற சொல் எவ்வெவ்வாறு புணரும் எனப் புள்ளிமயங்கியலில் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார்?

(அல்லது)

ஆ) தொண்ணூறு என்பதைப் பிரித்து புணர்ச்சி விதி தருக.

## பகுதி – இ ( 5 x 5 = 25 மதிப்பெண்கள்)

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க. (K4 & K5)**

16. அ) எழுத்துக்கள் மாத்திரை கொள்ளுமாற்றைத் தொல்காப்பியர் வழி நின்று விளக்குக.

(அல்லது)

ஆ) உடனிலை, வேற்றுநிலை மெய்ம்மயக்கங்களைச் சான்று தந்து விளக்குக.

17. அ) மொழியிறுதி எழுத்துக்கள் குறித்து மொழிமரபு கூறும் இலக்கணத்தை எடுத்துரைக்க.

(அல்லது)

ஆ) எழுத்துக்களின் பிறப்பு குறித்து தொல்காப்பியர் உரைத்தனவற்றைத் தொகுத்தெழுதுக.

18. அ) நான்கு வகை மொழி புணரியல்புகளைச் சான்றுடன் விவரிக்க.

(அல்லது)

ஆ) இரண்டாம் வேற்றுமைத் திரிபுகளாகத் தொகை மரபு கூறுவனவற்றை விளக்குக.

19. அ) இயல்பாகும் அகர ஈற்றுச் சொற்கள் யாவை? விளக்குக.

(அல்லது)

ஆ) உயிரீற்றுச் சொற்கள் வேற்றுமை உருபேற்கும் போது பெறும் சாரியைகளைப் புலப்படுத்துக.

20. அ) இயற்பெயர் முன் முறைப்பெயர் புணருமாற்றைப் புள்ளிமயங்கியல் வழி ஆய்ந்துரைக்க.

(அல்லது)

ஆ) ஒன்று முதலான எண்கள் முன் ஆயிரம் புணரும்போது ஏற்படும் மாற்றங்களை ஆராய்க.

********

ETHICAL PAPER